සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Geography

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	புவியியல்

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

கவனிக்க:-

- **பகுதி I எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை அளிக்குக.**
- **பகுதி II வினாக்களுக்கு விடையளிப்பதற்காக வேறு ஒரு கடதாசியை பயன்படுத்துக.**

பகுதி I

- **இலக்கம் 01 தொடக்கம் 05 வரை உள்ள வினாக்களில் இடைவெளிகளுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

01. உலகில் மிகப்பெரிய சமுத்திரம் ..... சமுத்திரமாகும் (அத்திலாந்திக் / பசுபிக் / இந்து)

02. கிரீன்விச் கோடு விரிவடைவது ..... நெட்டாங்கு ஊடாக ஆகும் (0° / 180° / தெற்கு 80°)

03. இலங்கையின் இடி மின்னல் தாக்கம் அதிகமாக நிகழ்வது ..... மாதங்களில் ஆகும் (மே - செப்டம்பர் / டிசம்பர் - பெப்ரவரி / மார்ச் - ஏப்ரல்)

04. பிரான்ஸ் அமைந்திருப்பது ..... கண்டத்தில் ஆகும் (ஆசியா / ஆப்பிரிக்கா / ஐரோப்பா)

05. தென்னாசியாவில் அதிக சிசு மரண வீதத்தை காட்டும் நாடு ..... ஆகும் (இந்தியா / பாகிஸ்தான் / பூட்டான்)

- **இலக்கம் 06 தொடக்கம் 10 வரையான வினாக்களிள் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் எதிரே உள்ள கூட்டில் அடையாளம் இடுக.**

06. எச்சக்குன்று உள்ளகச் சமவெளியில் காணப்படும் விஷேடமான தரைத்தோற்ற பண்பாகும். (.....)

07. மடகஸ்கர் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது. (.....)

08. ஹிக்கடுவ இலங்கையின் தென்கரையோரத்தில் அமைந்துள்ளது. (.....)

09. யாழ்ப்பாண குடா நாட்டில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நீர் பம்பிகள் மூலம் நீரைப் பெற்றாகும் (.....)

10. சார்பு அமைவிடம் என்பது அண்மித்த சுற்றுப்புறத்தில் உள்ள நிலப் பகுதி மற்றும் சமுத்திரம் போன்றவற்றின் அடிப்படையில் நாட்டின் அமைவிடத்தை காட்டுவதாகும். (.....)

Past Papers Wiki

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. இலங்கையில் சூறாவளி இடம் பெறக்கூடிய மாவட்டம் பின்வருவனவற்றுள் எது?
    1. குருநாகல் 2. மட்டக்களப்பு 3. நுவரெலியா 4. இரத்தினபுரி

12. ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள ஒரு உள்நாட்டு கடல்.
    1. ஏரல் கடல் 2. வடகடல் 3. செங்கடல் 4. போனட் கடல்

13. அரபிக் கடல் அமைந்திருப்பது
    1. பசுபிக் சமுத்திரத்தில் 2. அத்திலாந்திக் சமுத்திரத்தில்
    3. இந்து சமுத்திரத்தில் 4. ஆட்டிக் சமுத்திரத்தில்

14. இலங்கையின் வருடாந்த சராசரி மழை வீழ்ச்சியாக கருதப்படுவது.
    1. 20°C தொடக்கம் 25°C 2. 25°C தொடக்கம் 27°C
    3. 15°C தொடக்கம் 25°C 4. 27°C தொடக்க 30°C

15. இலங்கையில் காணப்படும் இயற்கையான தேசிய மரபுரிமையாக கருதப்படுவது பின்வருவனவற்றுள் எது?
    1. ரன்மசு பூங்கா 2. ஸ்ரீ மகா போதி 3. சிங்கராஜ காடு 4. கதிர்காம புனிததளம்

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் உள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

16. உலகின் மிகப்பெரிய தீவு …….. ஆகும்.

17. இலங்கை அமைந்திருப்பது பூகோளத்தின் …… அரைக்கோளத்தில் ஆகும்

18. கடல் மட்டத்திலிருந்து 300 மீட்டரை விட உயரமான நிலப் பகுதியில் …… தரைத்தோற்ற பண்புகளை காணலாம்.

19. இலங்கையின் ஈர வலயத்தையும் உலர் வலயத்தையும் வேறுபடுத்தும் இரண்டு நதி பள்ளத்தாக்குகளாவன தெதுறு ஓயா மற்றும் …….. கங்கையாகும்.


20. படம் ஒன்றில் காட்டப்படும் அனைத்து தகவல்களையும் வாசிப்பதற்கு …… அவசியமாகும்

(2×20=40 புள்ளிகள்)

பகுதி II

- **முதலாவது வினா கட்டாயமானது.**
- **மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை 5 ஆகும்.**

01. (அ) கீழே தரப்பட்டுள்ள உலக படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.



(i) A எழுத்தால் காட்டப்படும் கோடு யாது? (01 புள்ளி)

(ii) B எழுத்தால் காட்டப்படும் கோடு யாது? (01 புள்ளி)

(iii) C எழுத்தால் காட்டப்படும் கடல் என்ன? (01 புள்ளி)

(iv) D எழுத்தால் காட்டப்படும் நீரினை யாது? (01 புள்ளி)


(v) E எழுத்தால் காட்டப்படுவது …….. தீவாகும். (01 புள்ளி)

(vi) F எழுத்தால் காட்டப்படும் நாடு …….. ஆகும். (01 புள்ளி)

(vii) G எழுத்தால் காட்டப்படுவது …….. சமுத்திரமாகும். (01 புள்ளி)

(viii) H எழுத்தால் காட்டப்படுவது …….. கண்டம் ஆகும். (01 புள்ளி)

(ஆ) இங்கே காட்டப்படும் இலங்கை படத்தில் குறிக்கப்பட்டுள்ள வற்றைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்குக.



(i) தேவேந்திர முனையை காட்டும் எழுத்து யாது? (01 புள்ளி)

(ii) வடகீழ் பருவக்காற்றின் திசையைகாட்டும் எழுத்து என்ன? (01 புள்ளி)

(iii) பொலன்னறுவை மாவட்டத்தை காட்டும் ஆங்கில எழுத்து யாது? (01 புள்ளி)

(iv) ஊர்காவற்துறையை குறித்துக் காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்து யாது? (01 புள்ளி)

(v) J எழுத்தால் காட்டப்பட்டுள்ள நகரம் என்ன? (01 புள்ளி)

(vi) L எழுத்தினால் காட்டப்படும் நதி யாது? (01 புள்ளி)

(vii) K எழுத்தில் காட்டப்படும் கரையோர அம்சம் யாது? (01 புள்ளி)

02. (i) புவி சுற்றுகை எனப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) a) புவி சுழற்சிக்கு எடுக்கும் காலம் எவ்வளவு? (02 புள்ளிகள்)

b) புவி சுற்றுகைக்கு எடுக்கும் காலம் எவ்வளவு? (02 புள்ளிகள்)

(iii) 180° நெடுங்கோடு தொடர்பாக சிறு விளக்கம் ஒன்றை தருக? (05 புள்ளிகள்)

03. (i) தரப்பட்டுள்ள இலங்கை படத்தில் A மற்றும் B எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள தரைத்தோற்ற வலயங்கள் இரண்டையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)



(ii) படத்தில் A வலயத்தில் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்கள் நான்கை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கைக்கு மழை வீழ்ச்சி கிடைக்கும் முறைகள் இரண்டை குறிப்பிட்டு அதில் ஒரு முறையைப் பற்றி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

04. (i) இலங்கையில் வாழக்கூடிய இனக்குழுக்கள் இரண்டை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கைக்கு உரித்தான கண்ணால் காணக்கூடிய மனிதனால் உருவாக்கப்பட்ட மரபுரிமைகள் இரண்டையும் காண முடியாத மரபுரிமை ஒன்றையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) a) இலங்கையில் ஆதிவாசிகள் வாழக்கூடிய பிரதேசங்கள் இரண்டை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

b) இலங்கையில் உள்ள ஆதிவாசிகளின் வாழ்க்கை முறையை சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

05. (i) a) இலங்கையின் நிர்வாக தலைநகரம் மற்றும்

b) வணிக நகரத்தை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் ஈர வலயத்தில் பாய்ந்து ஓடும் நதிகள் இரண்டையும் பிரதான பயிர்செய்கை இரண்டையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் ஈர வலய நிலப்பரப்பின் முக்கியத்துவம் தொடர்பாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

06. (i) தரப்பட்ட படத்தில் A மற்றும் B படத்தினால் காட்டப்படும் அனர்த்த வகைகள் இரண்டையும் முறையாக பெயரிடுக. (02 புள்ளிகள்)



A B

(ii) இவ்வனர்த்தங்கள் இரண்டில் ஏதாவது ஒன்றினால் ஏற்படும் பாதிப்புகள் நான்கை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) a) இவ்விரண்டு அனர்த்தங்கள் தவிர இலங்கையில் அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அனர்த்தம் ஒன்றை குறிப்பிடுக. (01 புள்ளி)

b) இவ்வனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய சேதங்கள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

c) இச்சேதங்களை குறைத்துக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

07. (i) இலங்கையில் இடவிளக்க படங்களை தயாரிக்கும் நிறுவனம் யாது? (02 புள்ளிகள்)

(ii) தேசப்படம் ஒன்றில் உள்ளடக்கப்படும் அடிப்படை அம்சங்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) a) படம் ஒன்றை பிரதி செய்வதற்கு தேவையான பொருட்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

b) படம் ஒன்றை பிரதி செய்யும் முறையை சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** புவியியல்

Geography விடைப்பத்திரம் - தரம் 7

பகுதி – I

1- பசுபிக்	6- √	11- 2	16- கிரீன்லாந்து
2- 0°	7- √	12- 1	17- வட
3- மார்ச் - ஏப்ரல்	8- √	13- 3	18- மலை நாட்டு
4- ஐரோப்பா	9- ×	14- 4	19- வளவ
5- பாகிஸ்தான்	10- ×	15- 3	20- குறியீட்டு விளக்கம்

பகுதி – II

01. (அ)

(i) மத்திய கோடு (ii) கடக கோடு (iii) கஸ்பியன் கடல்
(iv) பாக்கு நீரினை (v) சுமத்திரா தீவு (vi) ஆஜன்டினா
(vii) அத்திலாந்திக் சமுத்திரம் (viii) அஸ்திரேலியா

(ஆ)

(i) A (ii) C (iii) E (iv) G (v) திருகோணமலை
(vi) களனி கங்கை (vii) களப்பு

02. (i) புவி சுற்றுகை என்பது புவி சூரியனை சுற்றி வருதல் புவி சுற்றுகை எனப்படும்.

(ii) a) சுழற்சிக்கு எடுக்கும் காலம் 24 மணித்தியாலம்

b) சுற்றுகைக்கு எடுக்கும் காலம் 365 நாட்கள்

(iii) 180 பாகை நெடுங்கோடு கிழக்கு நெடுங்கோடு மேற்கு நெடுங்கோடு ஆகிய இரண்டுக்கும் பொதுவானதாகும், 180 பாகை நெடுங்கோட்டை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச திகதி கோடு அடையாளம் இடப்பட்டுள்ளது, சில வேலைகளில் 180 பாகை கோடு நேரான கோடாக அமையும் ஆனால் நாடொன்று இரண்டாகப் பிரிக்கப்படும் நிலை உருவாகும், என்பதனால் அதனை தவிர்ப்பதற்காக சர்வதேச திகதிக்கோடு நாடுகளைப் பிரிக்காதவாறு செல்லும் கோடாக காட்டப்பட்டுள்ளது

03. (i) A உலர்வலய நிலத் தோற்றம் B மலைநாட்டு நிலத் தோற்றம்

(ii) சமவெளி எச்சக்குன்று நதிகள் காடுகள் முற்புதர் காடுகள்

(iii) பருவக்காற்று மழை, மேற்காவுகை மழை, சூறாவளி மழை
இதில் ஏதாவது ஒன்றைப் பற்றி விளக்கி இருத்தல்

04. (i) சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர்

(ii) கண்ணால் காணக்கூடிய மரபுரிமைகள் - மடுதேவாலயம், கதிர்காமம், ஸ்ரீமகா போதி, பள்ளிவாசல், சிகிரியா, ரன்மசு பூங்கா, குளங்களும் நீர்ப்பாசனகால்வாய்களும்.

கண்ணால் காணமுடியாத மரபுரிமைகள்- விருந்தினரை உபசரித்தல்,முதியோரை கௌரவித்தல் பழக்கவழக்கங்கள்,

(iii) a) தம்பான, மஹியங்கன, ஹென்னானிகல

b) முறையாக எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.

05. (i) a) நிர்வாக தலைநகரம் ஸ்ரீ ஜனவர்த்தனபுர கோட்டை
b) வணிக நகரம் கொழும்பு

(ii) தெதுறுஓயா, மகா ஓயா, களனி கங்கை, கழுகங்கை, நில்வள கங்கை
தென்னை, நெல், இறப்பர், தேயிலை

(iii) ஈரவலய நிலத் தோற்றத்தின் முக்கியத்துவம்

- வீர விளையாட்டு சமவெளிகள், மேடு பள்ளங்களுடன் கூடிய நிலத்தோற்றம்
- படிமுறை அமைப்பு, வருடம் பூராகவும் பாய்ந்து ஓடும் நதிகள், சேற்று நிலங்கள்,
- என்பவற்றோடு செழிப்பான தாவர, அதிக மக்கள் தொகையை காணலாம்,
- ஈரவலய கடற்கரையோரங்களுக்கு அருகில் தென்னைச் செய்கை,
- நதி பள்ளத்தாக்குகளில் நெல் மற்றும் தென்னைச் செய்கை
- சாய்வுகளில் இறப்பர் மற்றும் தேயிலை போன்ற பல்வேறு விவசாய நிலப் பயன்பாட்டு முறைகளை காண முடியும்
- நகர கைத்தொழில் சேவை மத்திய நிலையங்களான கொழும்பு கம்பஹா மாத்தறை காலி நீர்கொழும்பு கண்டி களுத்துறை போன்ற நகரங்கள் ஈரவலயநிலத் தோற்றத்திலேயே காணப்படுகின்றது

06. (i) A வரட்சி B வெள்ளம்

(ii) வறட்சியால் ஏற்படும் பாதிப்புகள்

- நீர் பற்றாக்குறை ஏற்படல், விவசாய அறுவடை அழிவடைதல், தொற்று நோய்கள் பரவுதல், சூழலில் வெப்பம் அதிகரித்தல், நீர்மட்டம் குறைவடைதல், காட்டுத்தீ ஏற்படல், மண்வளமிழத்தல்
- வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகள் விவசாய நிலங்கள் சேதமடைதல், மனித உயிர்கள் வீடுகள் உடமைகள் சேதம் அடைதல், அன்றாட செயல்பாடுகள் பாதிப்படைதல், நோய்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவுதல், வடிகால் தொகுதிகள் தடைப்படல், குடிநீர் மாசடைதல், உட்கட்டமைப்பு வசதிகள் சேதம் அடைதல்,

(iii) a) நிலச்சரிவு –
b) நிலச்சரிவினால் ஏற்படும் பாதிப்புகள் - உயிர் உடமைகள் சேதமடைதல், பயிர் நிலங்கள் சேதமடைதல்,சூழல் சேதமடைதல், நீர் தேக்கங்களில் மண் படிதலும் நீர் வழிகள் ஆறுகள் தடைபடுதலும்,உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைதல், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுதல்.
c) பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

07. (i) இலங்கை நில அளவை திணைக்களம்.

(ii) திசை, அளவுத் திட்டம், குறியீட்டு விளக்கம்

(iii) a) விடை 77 ஆம் பக்கம்
b) விடை 77 ஆம் பக்கம்

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank